## பாரதம் கிராமங்களில் வாழ்கிறது

கிராமப்புற மற்றும் நகர்ப்புற ஏழை மக்களுக்கு சேமிப்பு, கடனுதவி மற்றும் பல நிதி சேவைகள் அவர்களின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் பொருட்டு சிறு கடன்களாக வழங்கப்படுகிறது. கிராமப்புற ஏழை விவசாயிகள் நிலமற்ற கூலித்தொழிலாளர்கள், சிறுதொழில் செய்வோர், பரம்பரை தொழில் செய்வோர் முதலான சேமிக்கும் திறனில்லாதவர்கள் தங்களின் உடனடித் தேவைகளுக்காக கந்து வட்டிக்காரர்களிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்கி தங்கள் வாழ்நாள் முழுதும் கடன்பட்டு நிற்கிறார்கள். இந்நிலையைப் போக்க சிறு கடன் திட்டம் உதவி செய்கிறது. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கும் கடன் இந்த வகையைச் சாரும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலமாக இத்தகைய கடன்கள் வழங்கப்படுகின்றன.

## அனைவருக்கும் வங்கி சேவை (Financial Inclusion)

எல்லோருக்கும் வங்கி சேவை என்ற திட்டத்தை நாடு முழுவதும் பாரத ரிசர்வ் வங்கி 2005ம் அண்டிலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. எல்லோருக்கும் வங்கி சேவை என்பது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் கீழ்

1. நாட்டிலுள்ள அனைத்து பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மற்றும் அனைத்து அடித்தட்டு குடும்பங்களில் இருந்து குறைந்தபட்சம் ஏதாவது ஒருவருக்கு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்படும்.
2. மிகக் குறைந்த பட்ச முன் பணமோ அல்லது முன் பணம் ஏதும் ஆல்லாமலோ வங்கிக் கணக்கு தொடங்கப்படும்.
3. இருப்பிடச் சான்றிதழ் (குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை போன்றவை) மட்டுமே தேவையான அவணமாகும். இதனுடன் புகைப்படமும் தேவை.
4. எளிய முறையில் வங்கி கணக்கு தொடங்க எல்லா வங்கி கிளைகளும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

புதுச்சேரியிலும், தமிழ்நாட்டில் கடலூர் மாவட்டாத்திலும் இந்த திட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழகத்திலுள்ள மற்றுமுள்ள மாவட்டங்களிலும் இத்திட்டம் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

**கிராமப்புறதிட்டம் மற்றும் கடன் வசதி துறை**

**இந்திய ரிசர்வ் வங்கி**

கோட்டைச் சரிவு,
16, இராஜாஜி சாலை,
சென்னை - 600 001.
தொலைபேசி : 044 - 25399225
தொலைநகல் : 044 - 25394984
Email: rpcdchennai@rbi.org.in
URL : www.rbi.org.in

# இந்திய ரிசர்வ் வங்கி

சென்னை



# கிராமப்புறதிட்டம் மற்றும் கடன் வசதி துறை

## பாரதம் கிராமங்களில் வாழ்கிறது

பாரத ரிசர்வ் வங்கி கிராமப்புற மக்களின் வாழ்க்கையிலும் முக்கிய பங்கேற்கிறது. அதற்காக கிராமப்புற திட்டம் மற்றும் கடன் வசதி துறை ரிசர்வ் வங்கியில் பிரத்யேகமாக செயல்பட்டு வருகிறது.

இத்துறை கிராமப்புற மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்காக வங்கிகள் மூலம் முன்னுரிமைக் கடன்கள் வழங்குவதற்கான கொள்கைகளை வகுத்து வங்கிகள் அவற்றை முறையாகக் கடைப் பிடிக்கின்றனவா என்று கண்காணிக்கிறது.

முன்னோடி வங்கி திட்டத்தின் கீழ் வங்கிக்கடன்கள் கிராமப்புறங்களில் தங்கு தடையின்றி கிடைக்கின்றனவா எனவும், கிராமப்புறமக்களின் வாழ்க்கையில் முக்கிய பங்காற்றும் மாநில கூட்டுறவு வங்கிகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் வட்டார கிராம வங்கிகள் ரிசர்வ் வங்கியின் வரையறைகளுக்கு உட்பட்டு செயல்படுகின்றனவா எனவும் கண்காணிக்கிறது.

## முன்னுரிமை கடன்கள் என்பன யாவை?

1. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள், விவசாயக் கருவிகள், நீர்ப்பாசனம், கால்நடைகள் வளர்த்தல், பால் பண்ணைகள், உரம், பூச்சி மருந்து முதலிய விவசாயத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான கடன்கள்.
2. சிறு தொழில்கள் (உபகரணங்கள் மற்றும் இயந்திரங்களின் முதலீடு ரூ.5 கோடி வரை, குறுந்தொழில்கள் (ரூ.25 லட்சம் வரை).
3. சிறு போக்குவரத்து வாகனங்கள் வாங்க வழங்கும் கடன்கள்.
4. சுய தொழில் செய்வோருக்கு வழங்கும் கடன்கள்.
5. கல்விக்கடன்கள்.
6. நலிந்த மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கான கடன்கள்.
7. சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்கள்.
8. வீட்டுக் கடன்கள்.
9. சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலமற்ற கூலிகள், வாடகைக்கு நிலம் பயிரிடுபவர்கள் ஆகியோருக்கு வழங்கும் கடன்கள்.

## முன்னோடி வங்கித் திட்டம்

வங்கிக்கடன்கள், மாவட்ட கடன் திட்டத்தின் கீழ் கிராமப்புறபகுதிகளுக்கு தங்கு தடையின்றி கிடைக்கின்றதா ? அரசு அறிவித்த வறுமை ஒழிப்பு மற்றும் சுய வேலை வாய்ப்பு திட்டங்கள் ஒழுங்காக நடைபெறுகின்றனவா என கண்காணிக்க ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். மாநில/மாவட்ட அளவில் வங்கிகளின் செயல்பாட்டை ஒருங்கிணைத்து பல்வேறு கூட்டங்கள் மூலமாக அவ்விஷயத்தில் வங்கிகளை கண்காணிக்கும்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுமம் உள்ளது. தமிழகத்தில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்தியன் வங்கியும் இதன் அமைப்பாளர்களாக செயல்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்டதிற்கும் ஒரு முன்னோடி வங்கி உண்டு. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கி ஆகியவை அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களின் முன்னோடி வங்கிளாக செயல்படுகின்றன.

## பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டம் (PMRY)

இத்திட்டம் படித்த வேலையற்ற இளைஞர்கள் சுய தொழில் தொடங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

வயது வரம்பு – 18லிருந்து 35 வரை, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர், ஊனமுற்றோர் மற்றும் பெண்களுக்கு 45 வயது வரை.

குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ.1,00,000/–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

குறைந்தபட்ச கல்வித்தகுதி 8வது வகுப்பு.

### கடன் தொகை

சேவை மற்றும் வியாபாரம் சார்ந்த தொழில் செய்ய திட்ட மதிப்பீடாக இரண்டு லட்சம் வரையிலும், உற்பத்தி பிரிவு தொழில்களுக்கு திட்ட மதிப்பீடாக ரூபாய் ஐந்து லட்சம் வரையிலும் கடன் வழங்கப்படும். மானியம் – கடன் தொகையில் 15% அல்லது அதிகபட்சமாக ரூ. 12,500/–

### குழுக்கள்

சுய உதவி குழுக்கள் கூட்டாக தொழில் செய்ய அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் மானியத்துடன் இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும்.

## பொன்விழா கிராமப்புறசுயவேலை வாய்ப்புத் திட்டம் (SGSY)

இது கிராமப்புறங்களில் சிறு தொழில்களை ஏற்படுத்தி கிராமப்புற ஏழை மக்களின் வறுமையை போக்கும் திட்டம். இத்திட்டம் பெருவாரியாக சுய உதவி குழுக்களுக்கு பயனளிப்பது. தனி, சுய வேலைவாய்ப்பாளர்களும் இருக்கலாம். பயனாளிகள் வறுமைக் கோட்டுக்கு கீழிருக்கும் குடும்பங்களை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன் பெறும் சுய உதவி குழுக்களில் 10 முதல் 20 உறுப்பினர்கள் வரை இருக்கலாம்.

குழுக்கள் தொடங்கி 6 மாத செயல்பாட்டிற்கு பிறகு குழுக்களின் சேமிப்பு மற்றும் தர நிர்ணய அடிப்படையில் சுழல் நிதி கடன் வழங்கப்படும். சுழல் நிதிக் கடனுடன் மானியமாக ரூ.5,000/– முதல் ரூ.10,000/– வரை வழங்கப்படுகிறது. குறுந்தொழில் செய்ய திறமை பெறாத குழுக்களுக்கு மானியத்துடன் (மொத்த மானிய தொகை ரூ.20,000/–க்கு மிகையாகாமல்) இரண்டாவது தவணை சுழல் நிதி வழங்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

சுழல் நிதி பெற்ற குழுக்களுக்கு மேலும் ஆறு மாத செயல்பாடும் குறுந்தொழில் செய்யும் திறமையும் பெற்ற பின்னர் அடுத்த கட்ட வளர்ச்சிக்காக ஏதாவது தொழில் செய்ய திட்டமதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது ரூ. 1,25,000க்கு மிகையாகாமல் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும்.

## பொன்விழா நகர்ப்புறசுய வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)

வேலையற்ற 9ம் வகுப்புவரை படித்த நகர்ப்புற இளைஞர்களுக்கான திட்டமாகும். வயது வரம்பு இல்லை. குடும்ப வருமானம் வறுமை கோட்டுக்கு கீழே இருக்க வேண்டும். தொழில்களுக்கான திட்ட மதிப்பீடு ஒவ்வொருவருக்கும் ரூ. 50,000/– என்ற அளவில் வழங்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் அதிகபட்சமாக ரூ. 7,500/– வரைக்கும் மானியம் உண்டு. மேலும் தொழில் முயற்சிகளை குழுக்களாக சேர்ந்து தொடங்கவும் வங்கிகள் மானியத்துடன் கடனுதவி அளிக்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. குழுக்களுக்கு அதிகபட்சமாக ரூ.1,25,000/– வரையில் மானியம் அளிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் நகராட்சிகள்/மாநகராட்சிகள் மூலமாக வங்கிக்கு பரிந்துரைக்கப்படும்.